***DEPOSITION OF WITNESS***

***(Chapter XX of BNSS)***

***IN THE COURT OF ADDITIONAL MAHILA, TIRUVARUR.***

***CC.No. 108/2024 – P.W.6 (LW8)***

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நித்யா | வயது | 40 |
| தகப்பனார் பெயர் | கிருஷ்ணன் | ஜாதி | |
| தொழில் | மருத்துவர் | மதம் | |
| ஊர் | திருவாரூர் | தாலுக்கா | திருவாரூர் |

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் முன்னிலை.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 13.02.2026*

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அறுவைசிகிச்சை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.08.2022 ம் தேதி குந்தவை நாச்சியார் என்பவர் உள் நோயாளியாக அறுவை சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த நபரை நான் பரிசோதித்தபோது கழுத்தில் வலி இருப்பதாக கூறினார். அதற்காக நுண்கதிர் எடுக்கப்பட்டு எலும்பு முறிவு மருத்துவர் அவர்களிடம் கருத்துரை பெற்று வலி நிவாரண மருந்துகள் மற்றும் ஊசி போடப்பட்டது. 30.08.2022 ம் தேதி அவரை மருத்துவமனையிலிருந்து விடுவித்தேன். மேற்படி காயம்பட்ட நபருக்கு ஏற்பட்ட காயங்கள் தன்மை குறித்து சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். **(நான் வழங்கிய காயச்சான்று அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் என்னை இந்த வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

காயச்சான்றிதழில் கருத்துரை வழங்கும் இடத்தில் "Could not be given" என எழுதப்பட்டு பின்னர் அழிக்கப்பட்டு பின்னர் அதில் கையொப்பம் செய்யப்படவில்லை என்றாலும் சரிதான். ஒருவருக்கு வலி இல்லாமலேயே வலி இருப்பதாக சொல்லி சிகிச்சைக்கு சேரலாம் என்றால் சரிதான்.

(ஒம்/– S. முஹம்மது பாசில்)
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
திருவாரூர்.